நகல்:

நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை-5.

<u>சுற்றறிக்கை</u>

ந.க.எண்.63592/84/அந4 நாள்: 20.7.84.

பொருள்: பொதுப்பணிகள் - புதிய வேலைவாய்ப்பு அளித்தல் - அயற்பணியில் அனுப்பப்பட்ட அதிகாரிகளின் அயற்பணிக் காலத்தை நீட்டித்தல், பணியாளர்களை மாற்றுதல் மற்றும் வேறு பணியிடத்தில் அமர்த்துதல் மற்றும் அரசு நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குதல் கடைப்பிடிக்க வேண்டிய நியதிகள் - அரசின் கருத்து தெரிவிக்கப்படுவது - தொடர்பாக.

பார்வை: அரசுக்கடித எண்.34231/பல்வகை/84-2 நாள் 5.6.84.

பார்வையில் சுட்டியுள்ள அரசுக் கடிதத்தின் நகல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

அரசுக் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி அரசின் தீர்மானங்களை எதிர் காலத்தில் தவறாது பின்பற்றும்படி அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/-ரெ.ஜா.பா.பிரடெரிக்
இயக்குநருக்காக.

/உண்மை நகல்/

திரு வி.பி.எஸ்.நம்பியார், பி.எஸ்ஸி., அரசு சார்புச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, சென்னை-9, அவர்களால் நகராட்சிகளின் இயக்குநர், சென்னை 5 அவர்களுக்கு அனுப்பப்பட்ட க.எண்.34231/பல்வகை/84, நாள் 5.6.84 உள்ள கடிதத்தின் நகல்.

பொருள்: பொதுப்பணிகள் - புதிய வேலை வாய்ப்பு அளித்தல் அயற்பணியில் அனுப்பப்பட்ட அதிகாரிகளின் அயற்பணிக் காலத்தை நீட்டித்தல், பணியாளர்களை மாற்றுதல் மற்றும் வேறு பணி-யிடத்தில் அமர்த்துதல் மற்றும் அரசு நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குதல் கடைப்பிடிக்க வேண்டிய நியதிகள் - அரசின் கருத்து தெரிவிக்கப்படுகிறது.

பொதுப்பணிகளைப் பொறுத்தவரை அரசின் கீழ்க்கண்ட தீர்மானங்களைத் தங்களது தகவலுக்காகவும், எதிர்காலத்தில் தவறாது பின்பற்றுவதற்காகவும் தெரிவிக்கிறேன்.

1) அரசுத் துறைகள் மற்றும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ்வரும் வாரியம்/கழகங்கள் ஆகியவற்றில் புதிய வேலை வாய்ப்புக்களை அளிக்கும்போது ஒரு குடும்பத்தில் வேறுயாரும் வேலையில் இல்லையென்றிருப்பின் அத்தகையோருக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

2) நடைமுறையில் உள்ள விதிகளின்படி எந்த ஒரு அலுவலரும் பொதுவாக 3 ஆண்டுகளுக்குமேல் அயற்பணியில் இருக்ககூடாது. சிறப்புக்காரணங்களுக்காக 4 ஆண்டுகள் வரை அயற்பணியில் இருக்க அனுமதி வழங்கலாம். ஆனால் 4 ஆண்டுகளையும் கடந்து மேலும் ஓராண்டு நீடிப்பு அளிக்கவேண்டுமென்று கோரும் சிலகோரிக்கைகள் அரசுக்கு அனுப்பப்படுகிறது. அயற்பணியில் உள்ள அந்த அதிகாரி செய்யும் பணியை மற்ற அலுவலர்கள் செய்ய இயலாது என்றுகூற முடியாதாகையால், இதனைதவிர்க்கவேண்டும்.

3) ஒரு ஊரில் பணியாற்றும் ஒரு அலுவலரை வேற்றூருக்கு மாற்றல் செய்தால் அவர் புதிய பதவியில் பணி ஏற்காது விடுப்பில் சென்றுவிடும் முறையினைச்சிலர் கடைப்பிடிப்பதாக அரசுக்குத்தெரியவந்துள்ளது. எனவே நியமனம் செய்யப்பட்டபதவியில் பணியாற்றாது விடுப்பில் சென்று திரும்பும்போது வேற்றிடத்தில் பணியைச்செய்யும் வாய்ப்பைப்பெறும் தந்திரத்தை ஏற்ககூடாது. முதலில் நியமித்தஇடத்தில் பணியை அவர்செய்ய வேண்டும். அதற்கேற்றவாறு மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்று அரசு கருதுகிறது.

த.பி.பா.

4) மற்றும் அரசு நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் போது, வாங்குகின்ற பொருட்கள் அத்தனையும் அரசு நிறுவனங்களிடமிருந்து வாங்க வேண்டும். அரசு நிறுவனங்களில் இல்லாத பொருட்கள் தேவையெனில் அரசுக் கூட்டுறவு அமைப்பு, தனியார் கூட்டுறவு அமைப்பு, அப்படியும் இல்லையெனில் தமிழகத்தில் தயாரிக்கப்படும் நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட வேண்டும். அரசுக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்களும், மருத்துவத் துறை, அரசு இலாகாக்கள் போன்றவற்றில், துணிகளைக் கைத்தறித் துணியாகவும் மற்றும் அனைத்தையும் அவ்வாறே பெற வேண்டும். இவை எல்லாவற்றிலும் அந்தந்த அமைப்பின் முத்திரைகள் இருக்க வேண்டும் என அரசு கருதுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

ஒம்/-
அரசுச் சார்புச் செயலாளருக்காக.

/உண்மை நகல்/

Office of the Tamil Nadu
Institute of Urban Studies,
Coimbatore - 43.

RF.3/84(2519/84/A2) Dated: 18.8.84

Copy communicated.

Sd/-(G.DHANDAPANI)
Director in charge.

To

All Faculty Members.

All Staff.

//forwarded by order//

MANAGER.